ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1698/11 - 2011 මාර්තු 22 වැනි අඟහරුවාදා - 2011.03.22
*1698/11 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# *பகுதி IV (அ) - மாகாண சபைகள்*

## *மாகாண சபை அறிவித்தல்கள்*

**ஊவா மாகாணத்தின் மாகாண சபை**

**2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கம் கொண்ட ஊவா மாகாணத்தின் விளையாட்டு நியதிச் சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் 2010, திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு, 2011, பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.

கே. டீ. சிறிசேன,
மாகாண சபைச் செயலாளர்,
ஊவா மாகாணம்.

ஊவா மாகாண சபை அலுவலகம்,
இராஜ வீதி.
2011, பெப்புருவரி 25.

**2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கம் கொண்ட ஊவா மாகாண விளையாட்டுத்துறை நியதிச் சட்டம்**

இது விடயமாக ஊவா மாகாண எல்லைக்கு விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பிரதேச, மாவட்ட, மாகாண விளையாட்டுச் சங்கங்கள், மாகாண விளையாட்டுச் சபைகள், மாகாண விளையாட்டு நிதியம், மாகாண விளையாட்டு நிலையங்கள் ஆகியவற்றை தாபித்து பதிவு செய்வதற்காகவும், விளையாட்டு வசதிகளை வழங்குதல், திட்டமிடல் மற்றும் ஒன்றிணைந்த விளையாட்டுக்களுக்கான வேலைத் திட்டங்கள் மனமகிழ்வுக்கான வசதிகள் மற்றும் விளையாட்டுத் துறை அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்பு ஆகியவற்றில் பாதிப்பை செலுத்தும் காரணிகளைக் கவனத்தில் கொண்டு, அவற்றுடன் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கான நியதிகளை ஆக்குவதற்காகவுமாக 1977 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கம் கொண்ட விளையாட்டுத்துறை நியதிச் சட்டத்தை மாற்றியமைப்பதற்கான ஒரு நியதிச் சட்டமாகும்.

இந் நியதிச் சட்டமானது 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கம் கொண்ட விளையாட்டுத்துறை சட்ட விதிகளுக்கு ஏற்புடையதாகும்.

இது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையினால் 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கம் கொண்ட விளையாட்டுத்துறை நியதிச் சட்டம் என ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து ஆளுநர் அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும்.

சுருக்கப்பெயர்.

1. இந்த நியதிச் சட்டமானது 2010 ஆம்ஆண்டின் ............ஆம் இலக்கம் கொண்ட விளையாட்டுத்துறை நியதிச் சட்டம் என அழைக்கப்படும்.

2. இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக, இதில் ஒழுங்கு முறையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஒத்திசைவாக-

(1) ஊவா மாகாணத்தில் மாகாண விளையாட்டுச் சபை, மாவட்ட விளையாட்டுச் சபைகள் மற்றும் பிரதேச விளையாட்டுச் சபைகள்.

(2) அமைச்சர் அவர்களால் தீர்மானிக்கப்படும் எண்ணிக்கைக்கு ஏற்ப கோட்ட, மாவட்ட மற்றும் மாகாண மட்ட விளையாட்டுக் கழகங்கள்.

(3) ஊவா மாகாணத்தின் மாகாண விளையாட்டு நிதியம் என்ற பெயரில் அழைக்கப்படும் மாகாண நிதியத்தின் தனியான கணக்கொன்று.

(4) அமைச்சர் அவர்களினால் தீர்மானிக்கப்படும் விதத்தில் மாகாண விளையாட்டுக் கல்வி நிறுவனமொன்று அமைக்கப்பட இயலும்.

3. மாகாண விளையாட்டுப் பணிப்பாளர்:

இந்நியதிச் சட்டத்தின்கீழ் அமைச்சரினால்,

வியைாட்டுப் பணிப்பாளர் நியமனம்.

(1) பணிப்பாளர். விதிக்கப்படும் நியதிகளுக்கமைய தன்னிடம் ஒப்படைக்கப்படுகின்ற கடமை களையும், காரியங்களையும் நிறைவேற்றுதல் சம்பந்தமாக வகை கூறக்கூடிய விளையாட்டுத் துறையில் உள்ள மாகாண அரச சேவையின் சிரேஷ்ட அரச அதிகாரியொருவர் விளையாட்டுப் பணிப்பாளராக ஊவா மாகாண ஆளுநர் அவர்களினால் நியமிக்கப்பட வேண்டும்.

(2) அதிகாரங்களை செயற்படுத்துகின்ற போது மற்றும் கடமைகள், காரியங்களை நிறைவேற்றும் போது, அமைச்சரினால், செயலாளரினால் வெளியிடப்படும் பொதுவான அல்லது விசேட உத்தரவுகளின் பிரகாரம் விளையாட்டுப் பணிப்பாளர் செயற்பட வேண்டியவராக உள்ளார்.

4. உதவி பணிப்பாளர்:

(1) விதிக்கப்படும் நியதிகளுக்கமைய தன்னிடம் ஒப்படைக்கப்படுகின்ற கடமைகளையும், காரியங்களையும் நிறைவேற்றுதல் சம்பந்தமாக வகை கூறக்கூடிய விளையாட்டுத் துறையில் உள்ள மாகாண அரச சேவையின் சிரேஷ்ட அரச அதிகாரியொருவர் விளையாட்டுப் பணிப்பாளராக ஊவா மாகாண ஆளுநர் அவர்களினால் நியமிக்கப்பட வேண்டும்.

*பகுதி I*

## மாகாண விளையாட்டு நிதியம் அமைத்தலும் நிர்வகித்தலும்

மாகாண விளையாட்டு அபிவிருத்தி நிதியக் கணக்கு.

5. ஊவா மாகாணத்தில் விளையாட்டுகளுக்காக நன்கொடை வழங்குதல், ஊக்குவித்தல், மேம்படுத்தல் மற்றும் செய்தல் ஆகியவற்றிற்காக இதன் பின்னர் “நிதியக்கணக்கு” நிதியக்கணக்கு எனக் குறிப்பிடப்படும் மற்றும் ஊவா மாகாண விளையாட்டு நிதியக் கணக்கு எனக் குறிப்பிடப்படும் நிதியக் கணக்கொன்று மாகாண நிதியத்தின் தனியானதொரு கணக்காக அமைக்கவியலும்.

நிதியக்கணக்கின் நிர்வாகம்.

**06. நிதியக் கணக்கு நிர்வாகம் :** அமைச்சரின் கட்டளைகளுக்கு அமைய நிதியக் கணக்கு நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக பொறுப்புச் சபையொன்று அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டும். அந்த பொறுப்புச் சபை கீழே குறிப்பிடப்படுகின்றவர்களை உள்ளடக்கியதாக அமையும்:-

(1) அமைச்சின் செயலாளர் பொறுப்புச் சபையின் தலைவராவார்.

(2) பிரதி பிரதான செயலாளர் - நிதி

(3) அமைச்சின் கணக்காளர்.

(4) மாகாண விளையாட்டுப் பணிப்பாளர்

(5) மாகாண விளையாட்டுச் சபையின் ஓர் உறுப்பினர்.

**07. நிதியக் கணக்கில் வைப்பு செய்யப்படும பணம்:** நிதியக் கணக்கின் வைப்புகள்.

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மூலமாக இடைக்கிடையே நன்கொடைகளாக வழங்கப்படக்கூடிய பணம் அனைத்தும்.

2. நிதியக் கணக்கின் காரியங்களுக்காக ஊவா மாகாண சபையினால் அங்கீகரிக்கப்படும் பணம் அனைத்தும்.

3. மாகாண சபைகள் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் அரசாங்கத்தினால் வழங்கப்படும் வெளிநாடுகளின் நன்கொடைகளாக கிடைக்கும் பணம்.

4. ஏதேனும் ஒரு அமைப்பு அல்லது கம்பெனி அல்லது ஒரு நபரினால் நிதியத்துக்கு வழங்கப்படும் அன்பளிப்பாகக் கிடைக்கும் பணம்.

5. வேறு வழிகள் மூலம் கிடைக்கும் பணம் அனைத்தும்.

8. அவ்வாறாயினும், யாதேனும் குறித்த காரியங்களின் பயன்பாடுகளுக்காக எடுக்கக்கூடிய நிபந்தனைகளின் பேரில் இப்பிரிவின் (III), (IV), (V) ஆகிய பந்திகளின் கீழ் பணம் கிடைக்கும் வேளைகளில் அப்பணத்தை நிதியக் கணக்கில் வைப்பு செய்தல் முழுமையாக அமச்சரின் விருப்பத்துக்கமையவே இடம்பெறும்.

9. யாதேனும் அசையும் அல்லது அசையா சொத்துக்கள் அன்பளிப்பாக இந் நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப அதன் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்காக அமைச்சரினால் பெற்றுக்கொள்ள முடியும். அசையும், அசையா சொத்துக்களின் அன்பளிப்பு.

10. அவ்வகையான யாதேனுமொரு சொத்து அமைச்சரின் விருப்பத்துக்கமைய மற்றும் அவரால் நிச்சயிக்கப்படும் விதத்தில் விற்று, அவ் விற்பனை மூலம் கிடைத்த பணம் நிதியக் கணக்கில் வைப்பு செய்யப்பட இயலும்.

11. பொறுப்புச்சபையினால் நிச்சயிக்கப்படுகின்ற நிதியக் கணக்கிலிருந்து மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளின் அளவுகள் கீழ் கண்டவாறு அமையும்:-

(1) விளையாட்டின் மேம்பாட்டுக்காக பெறப்பட்டுள்ள வெற்றிச் சின்னங்களைக் கௌரவிக்கு முகமாகவிளையாட்டுக்களில் பங்குபற்றுபவர்களுக்கும், முன்பு பங்குபற்றியவர்களுக்கும் பாராட்டுக் கொடுப்பனவாக,

(2) ஊவா மாகாணத்தில் குடியிருக்கும் தேசிய மற்றும் சர்வதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி திறமைகளை வெளிக்காட்டும் வீரர், வீராங்கனைகளுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவாக.

(3) ஊவா மாகாணத்தில் குடியிருக்கும் திறமையுள்ள வீரர், வீராங்கனைகள், வெளிநாடுகளில் நடாத்தப்படுகின்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் போது ஏற்படுகின்ற செலவினங்களுக்காக நன்கொடை வழங்கல்.

(4) ஊவா மாகாணத்தில் விளையாட்டுத்துறையில் விசேட சாதனை புரியும் விளையாட்டு உத்தியோகத்தர்கள், பயிற்றுவிப்பாளர்கள், நடுவர்கள் மற்றும் வேறு நபர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும், ஊக்குவிப்பு கொடுப்பனவும் வழங்குதல்.

(5) தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு பயிற்சி, நடுவர் பயிற்சி மற்றும் கருத்தரங்களில் பங்குபற்றும் விளையாட்டுத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் செலவுகளுக்காக உதவுதொகைகளை வழங்குதல்.

(6) ஊவா மாகாணத்துக்குள் விளையாட்டுக்களின் அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், விளையாட்டுப் பயிற்சி நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் விளை யாட்டுத் தொகுதிகள் ஆகியவற்றை நிர்மானித்தல், நவீனமயமாக்கல், விருதி செய்தல் என்பவற்றுக்காக.

(7) விளையாட்டுக்களில் ஈடுபடுபவர்களை காப்புறுதி செய்வதற்காக.

(8) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் அல்லது அமுலுக்குக் கொண்டுவரும் காரியத்தைச் செய்வதற்காக.

(9) விளையாட்டின் மேம்பாட்டுக்கு அவசியமானதென அமைச்சர் நிச்சயிக்கும் வேறு காரியங்களுக்காக நிதியக் கணக்கிலிருந்து கொடுப்பனவு செய்யலாம்.

நிதியக் கணக்குப் பொறுப்புச் சபையின் பொறுப்புகளும் கடப்பாடுகளும்

12. நிதியக் கணக்குப் பொறுப்புச் சபையின் பொறுப்புகளும், கடமைகளும்:

(1) நிதியக் கணக்கு நிர்வாகம் மற்றும் பொறுப்பு
(2) நிதி சேகரித்தல் மற்றும் அதனை ஈடுபடுத்தல் கடமைகள் சம்பந்தமான கொள்கைகளையும் நிபந்தனைகளையும் ஆக்கல்.
(3) பயன் பெறுநர்களை இனங்காணல்.
(4) நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நிதியத்துக்குப் பணம் திரட்டல்.
(5) நிதியக் கணக்கிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற சகல கொடுப்பனவுகளையும்அனுமதித்தல்.
(6) சொத்துக்களை விலைகொடுத்து வாங்குதல் மற்றும் பணமுதலீடு செய்தல்.
(7) ஒவ்வொரு வருட முடிவின் பின்னரும் 3 மாதங்களுக்குள் நிதியக் கணக்கின் நடைமுறை சம்பந்தமான நிர்வாக அறிக்கையொன்றை அமைச்சரிடம் சமர்ப்பித்தல்.

13. ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டும் முடிவுற்ற பின்னர் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு நிதியக் கணக்கின் இறுதிக் கணக்குகளைத் தயாரித்து கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் அமைச்சுச் செயலாளரது பொறுப்பாவதுடன் அதற்குப் புறம்பாக வேறும் கணக்காய்வு நடைமுறைகள் தேவையென செயலாளர் கருதினால் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ள செயலாளருக்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.—

(1) 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் பகுதி II இன் ஏற்பாடுகளின் மூலம் தேவையான மாற்றங்களுடன் நிதியக் கணக்கின் நிதி நிர்வாகம் மற்றும் கணக்குகள் தொடர்பாக ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

(2) நிதியக்கணக்கின் நிதியாண்டு பஞ்சாங்க வருடமாக அமைய வேண்டும்.

14. அமைச்சரினால் இயன்றளவு விரைவாக ஒவ்வொரு பஞ்சாங்க வருடத்துக்குமான நிதியக் கணக்கு நிர்வாகம் தொடர்பான அறிக்கையொன்று, நிதியத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட அவ் வருடத்தின் கணக்குகளின் பிரதியொன்றும், அக் கணக்குகள் பற்றிய கணக்காளர் நாயகத்தின் அறிக்கையும் ஊவா மாகாணத்தின் மாகாண சபை முதலமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுவதுடன், முதலமைச்சரினால் மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட வகைசெய்யப்பட வேண்டும்.

## *பகுதி II*

### மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச விளையாட்டுச் சபைகளை அமைத்தல்

ஊவா மாகாண விளையாட்டுச் சபையை அமைத்தல்.

15. ஊவா மகாணத்தில் விளையாட்டுக்கள் மற்றும் உடற் கல்வியை முன்னேற்றுதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் ஊக்குவித்தல் தொடர்பான விடயங்கள் சம்பந்தமாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் நடைமுறைப்படுத்தும் போது ஒத்துழைப்பு வழங்குதல் போன்ற காரியங்களுக்காக இதன் பின்னர் மாகாண விளையாட்டுச் சபை என அழைக்கப்படும் ஒரு சபை அமைக்கப்படல் வேண்டும்.

16. (1) மாகாண விளையாட்டுச் சபை கீழே குறிப்பிடப்படும் அதிகாரிகளைக் கொண்டதாக அமையும்:—

(1) ஊவா மாகாணத்தின் பிரதான செயலாளர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் ஓர் அதிகாரி.
(2) மாவட்டச் செயலாளர்.
(3) மாகாணத்தின் விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பான செயலாளர்.
(4) மாகாணத்தின் விளையாட்டுப் பணிப்பாளர்.
(5) மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்.
(6) மாகாண இளைஞர் சேவைகள் பணிப்பாளர்.
(7) மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்.
(8) மாவட்ட விளையாட்டு அதிகாரிகள்.
(9) பிரதி பொலிஸ் அதிபர் - ஊவா
(10) அமைச்சரினால் குறிப்பிடப்படும் மாவட்ட அல்லது பிரதேச விளையாட்டு சபைகளிலிருந்து இனங்காணப்பட்ட விளையாட்டுத்துறை பிரதிநிதிகள் 4 பேர்.
(11) கௌரவ அமைச்சரினால் பரிந்துரை செய்யப்படும் ஊவா மாகாண சபை உறுப்பினர்கள் மூவர்.

(12) கௌரவ அமைச்சரினால் பரிந்துரை செய்யப்படும் ஊவா மாகாண மாகாண சபை உறுப்பினர்கள் மூவர்.

(2) ஊவா மாகாண பிரதான செயலாளர் மாகாண விளையாட்டுச் சபையின் தலைவராகவும், விளையாட்டு துறைக்குப் பொறுப்பான செயலாளர் மாகாண விளயைாட்டுச் சபையின் செயலாளராகவும் பதவி வழியாக நியமனம் பெற வேண்டும்.

17. மாகாண விளையாட்டுச் சபையின் கடப்பாடுகள்:

மாகாண விளையாட்டுச் சபையின் கடப்பாடுகள்.

(1) ஊவா மாகாணத்தின் விளையாட்டுக்கள் தொடர்பான வேலைத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் இணைப்புகளை ஏற்படுத்துதல் ஆகியன மாகாண விளையாட்டுச் சபையினால் மேற்கொள்ளப்படும்.

(2) ஊவா மாகாணத்தின் மகிழ்வூட்டக்கூடிய விளையாட்டு வசதிகளை வழங்குதல், மாகாண விளையாட்டுச் சபையிடம் ஒப்படைக்கப்படும்.

(3) விளையாட்டுக்கள் தொடர்பான வேலைத் திட்டங்களை முன்வைத்தல், எற்பாடுகள் மற்றும் முறையான செயற்பாடுகள் தொடர்பாக மாகாண விளையாட்டுச் சபையினால் அமைச்சருக்கு ஆலோசனை வழங்கப்படும்.

(4) ஊவா மாகாணத்தின் திறமையான விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும் இனங்காணல், விருது வழங்குதல், உதவுதொகைகள் வழங்குதல் மற்றும் விளையாட்டுத் துறையிலுள்ள அதிகாரிகளின் தராதாரங்களை மேம்படுத்தலுக்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் சம்பந்தமாக மாகாண விளயைாட்டுச் சபை அமைச்சருக்கு ஆலோசனை வழங்கும்.

(5) விளையாட்டுக்களில் ஒழுக்கத்தைப் பாதுகாத்தல், முறைகேடான நடத்தை மற்றும் பிழையான நடவடிக்கைகளை தவிர்த்தல் மற்றும் விளையாட்டுப் பயிற்சிகளை உயர் மட்டத்தில் பேணுவதற்கான காரணிகள் பற்றி மாகாண விளையாட்டுச் சபை அமைச்சருக்கு ஆலோசனை வழங்க வேண்டும். விளையாட்டு உபகரணங்களைப் பகிர்ந்தளித்தல், விளையாட்டுக்கள் பற்றிய நடவடிக்கைகளின் மேம்பாடுகளுக்காக செயற்படுகின்ற திட்டங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல், மாகாண விளையாட்டு விழாவினை எற்பாடு செய்தல் மற்றும் தேசிய சர்வதேச விளையாட்டு வைபவங்களில் வீரர்கள், வீராங்கணைகளை பங்குபெறச் செய்தல் தொடர்பில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

(6) மாகாணத்தினுள் நடைமுறைப்படுத்துகின்ற விளையாட்டுக் கழகங்கள், சங்கங்களை வலுப்படுத்தல், விளையாட்டு அபிவிருத்திக்கான அடித்தள வசதிகளை வழங்குதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

18. ஊவா மாகாணத்திற்கு உரிய நிர்வாக மாவட்டங்களில் விளையாட்டுக்களையும், உடற்கல்வியையும், எழுச்சிபெறச் செய்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான விடயங்களில், மாகாண விளையாட்டுச் சபையினது ஒப்புதலுடன் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்துக்கும், ''மாவட்ட விளையாட்டுச் சபை'' எனும் பெயரில் ஒரு சபை வீதம் இந் நியதிச் சட்டத்தில் காணப்படுகின்ற நியதிகளுக்கு அமைவாக அமைத்துக்கொள்ள இயலும். மாவட்ட விளையாட்டுச் சபைகளை அமைத்தல்.

**19. மாவட்ட விளையாட்டுச் சபையின் அமைப்பு:**

மாவட்ட விளையாட்டுச் சபையின் அமைப்பு.

(1) மாவட்ட விளையாட்டுச் சபையானது கீழே குறிப்பிடப்படும் அதிகாரிகளைக் கொண்டு அமையும்.

(1) மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்
(2) மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள்
(3) மாவட்ட விளையாட்டு அதிகாரி
(4) பிரதிக் கல்விப் பணிப்பாளர் - உடற்கல்வி.
(5) மாவட்ட இளைஞர் சேவைகள் அதிகாரி.
(6) மாவட்டத்திலுள்ள விளையாட்டு அதிகாரிகள்.
(7) சிரேட்ட பொலிஸ் அதிகாரி.
(8) இந் நியதிச் சட்டத்தின் 17 ஆம் பிரிவுக்கிணங்க பதிவு செய்யப்பட்டுள்ள விளையாட்டுச் சங்கங்களின் ஒவ்வொரு பிரதிநிதி வீதம்.

(2) அமைச்சர் குறிப்பிடும் விளையாட்டு துறையின் பிரதிநிதிகள் இருவர். சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி.

மாவட்ட விளையாட்டுச் சபையின் தலைவராக குறித்த மாவட்டத்தின் மாவட்டச் செயலாளரும், மாவட்ட விளயாட்டுச் சபையின் செயலாளராக குறித்த மாவட்டத்தின் மாவட்ட விளையாட்டு அதிகாரியும் பதவி வழியாக நியமனம் பெற வேண்டும்.

மாவட்ட விளையாட்டு சபையின் பொறுப்புக்கள்.

**20. மாவட்ட விளையாட்டுச் சபையின் பொறுப்புகளும் - கடப்பாடுகளும் :**

(1) மாவட்டத்துக்குள் உள்ள பிரதேச விளையாட்டு இடைத்தொடர்புகளை உருவாக்குதல்.

பொறுப்புக்களும் கடப்பாடுகளும்.

(2) பிரதேச விளையாட்டுச் சபைகளுக்கு இடையில் விளையாட்டுக்களை நன்கு பயிற்றுவிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் தொடர்பாக மாகாண விளையாட்டுச் சபையினுடாக அமைச்சுக்கு ஆலோசனை வழங்குதல்.

(3) மாவட்டத்தினுள் காணப்படும் விளையாட்டு வீரர்கள், வீராங்கணைகளின் விளையாட்டுத் களை உயர்வடையச் செய்வதற்கான செயற்பாடுகளை அமைச்சரின் அங்கீகாரத்துடன் செயற்படுத்தல்.

(4) மாவட்ட விளையாட்டுப் போட்டித் தொடர்களை ஏற்பாடு செய்தலும் மாகாண விளையாட்டுப் போட்டித் தொடருக்கு வீரர், வீராங்கனைகளை நெறிப்படுத்தலும்.

(5) அமைச்சினால் விவரிக்கப்படுகின்ற இந்நியதிச் சட்டத்தின் நியமனங்களுக்கமைய செயற்பாடுகளை தயாரித்தலும் அவற்றை நடைமுறைப்படுத்தலும்.

(6) மேற்படி பொறுப்புகளுக்கு மேலதிகமாக மாவட்ட விளையாட்டுச் சபையொன்றின் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்படனவாக அமைச்சரின் உத்தரவு மூலம் விதந்துரைக்கப்படும்.

பிரதேச விளையாட்டுச் சபைகளின் அமைப்பு.

21. ஊவா மாகாணத்தின் அந்தந்த பிரதேச செயலாளர் பிரிவுகளில்விளையாட்டுக்களையும், உடற்கல்வியையும் முன்னேற்றுவதற்காக, அபிவிருத்தி செய்வதற்காக, விளையாட்டு நடவடிக்கைகளில் அக்கறை காட்டச் செய்வதற்காக மற்றும் நிர்வகிப்பது தொடர்பான விடயங்களில் மாவட்ட விளையாட்டு சபைக்கு ஆலோசனைகளும் சிபார்சுகளும் முன் வைப்பதற்காக அந்தந்த பிரதேச செயலாளர் பிரிவுகளில் பிரதேச விளையாட்டுச் சபைகள் நிறுவப்பட இயலும்.

பிரதேச விளையாட்டுச் சபைகளின் அமைப்பு.

**22. பிரதேச விளையாட்டுச் சபைகளின் அமைப்பு :**

(1) பிரதேச விளையாட்டுச் சபைகளின் அமைப்பு கீழ்க்காணும் உத்தியோகத்தர்களைச் கொண்டதாக விளங்கும்:-

(1) குறித்த பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்
(2) குறித்த பிரதேச செயலாளர் பிரிவின் விளையாட்டு அலுவலர்
(3) குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் செயலாளர்.
(4) குறித்த பிரதேச செயலாளர் பிரிவின் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்.
(5) குறித்த பிரதேச செயலாளர் பிரிவின் இளைஞர் சேவைகள் அலுவலர்.
(6) பிரதேசததிலுள்ள பொலிஸ் நிலையத்தின் அதிபர்
(7) அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் விளையாட்டுத் துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள் இருவர்.

(2) குறித்த பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் பிரதேச விளைாட்டுச் சபையின் தலைவராகவும், குறித்த பிரதேச செயலாளர் பிரிவின் விளையாட்டு அலுவலர் பிரதேச விளையாட்டுச் சபையின் செயலாளராகவும் பதவி வழியாக நியமிக்கப்படுவர்.

**23. பிரதேச விளையாட்டுச் சபைகளின் பொறுப்புகளும் கடப்பாடுகளும்.**

பிரதேச விளையாட்டுச் சபையின் கடப்பாடுகள்.

(1) பிரதேச ரீதியாக திறமையுள்ள வீரர்களும் வீராங்கணைகளும் தமதுவிளைாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்வதற்குத் தேவையான காரியங்களை அமைச்சரின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளல்.

(2) பிரதேச செயலாளர் பிரிவினுள் போட்டிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் மாவட்டப் போட்டிகளில் வீரர், வீராங்கணைகளைப் பங்குபற்றச் செய்தல்.

(3) பிரதேசத்திற்கு உரிய விளையாட்டுக்களை இனங்காணல், அவற்றை வியாபகம் செய்தல் மற்றும் அதன்பின் வளர்ச்சிக்கான காரியங்களை ஆற்றுதல்.

(4) அமைச்சரினால் விதித்துரைக்கப்படும் இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய காரியங்களையும் கருமங்களையும் ஏற்பாடு செய்து நடைமுறைப்படுத்தல்.

24. மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச விளையாட்டுச் சபைகளின்கடப்பாடுகளுக்கான நிர்வாக கட்டளைகள்.

விளையாட்டுச் சபைகளுக்கான நிர்வாக கட்டளைகள்.

(1) சபைகளின் கூட்டங்களில் பிற்பற்ற வேண்டிய நடைமுறைகளையும், கடப்பாட்டுக் கைமாறல்களைக் கருத்திற்கொண்டு சட்டங்களை இயற்றுதல் அமைச்சரின் அங்கீகாரத்துடன் விளையாட்டுச் சபைகளினால் மேற்கொள்ளப்படும்.

(2) சபைகளின் கூட்டங்களுக்கான பெரும்பான்மை அமைச்சரினால் விதிக்கப்படும் கட்டளையின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

25. மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச விளையாட்டுச் சபைகளின் அங்கத்துவத்துக்கான தகுதியீனங்கள்.

விளையாட்டுச் சபைகளின் அங் கத்துவத்துக்கான தகுதியீனங்கள்.

(1) ஏதாவதொரு நீதிமன்றத்தினால் சித்த சுயாதீனம் அற்றவர் என தீர்மானிக்கப்படுதல்.

(2) ஏதாவதொரு நீதிமன்றத்தினால் அங்கவீனர் எனத் தீர்மானிக்கப்படுதல்.

(3) குற்றச் செயல்களுக்காக நீதிமன்றத் தண்டணைக்கு உட்படுதல்

(4) விளையாட்டுத் துறைக்கான வசதிகள் மற்றும் உள்ளீடுகளை தயாரித்தல் மற்றும் விநியோகித்தல் போன்ற தொழில்களில் ஈடுபடுதல் அல்லது அவற்றுடன் ஏதேனும் ஒரு விதத்தில் தொடர்புபடுதல்

(5) நாடாளுமன்றம், மாகாண சபை அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றின் உறுப்பினராதல்.

26. **மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச விளையட்டுச் சபைகளின் அங்கத்துவர்களுக்கான பதவிக் காலம்.**

அங்கத்துவ பதவிக்காலம்.

(1) அமைச்சரினால் பெயர் குறிப்படப்படும் ஒருவர் விளையாட்டுச் மரணம் காரணமாக முன் கூட்டியே சேவையை சபைகளின் வைவிட்டுச் செல்லுதல், இராஜினாமா செய்தல் அங்கத்தவர்களுக்கான அல்லது நீக்கப்படுதல் ஆகியன அல்லாதவிடத்து பதவிக் காலம்.அங்கத்தவர்களின் பதவிக்காலம் 03 ஆண்டுகளாகும்.

(2) தன்னால் நியமிக்கப்பட்ட ஓர் அங்கத்தவரை நீக்குதல் பொருந்துமென அமைச்சர் கருதினால் காரணம் அறிவிக்காமலே அவ்வாறு செய்ய முடியும்.

(3) சேவைக் காலம் முடிவடைந்தபடியால் பதவியை விட்டுச செல்லும் ஓர் அங்கத்தவர் மீண்டும் நியமிக்கப்படலாம்.

(4) வெற்றிடத்துக்காக நியமிக்கப்படும் ஒருவர், தனக்கு முன்பிருந்தவருக்கான எஞ்சியுள்ள காலப் பகுதிக்கு மாத்திரமே பதவியில் இருக்கலாம்.

## பகுதி III

### ஊவா மாகாணத்தில் விளையாட்டுக் கழகங்களையும் சங்கங்களையும் அமைத்தல்.

விளையாட்டுச் கழகங்கள் மற்றும் சங்கங்கள் அமைத்தல்.

27. விளையாட்டுக் கழகமொன்றினை அமைக்கக்கூடிய வகையிலான ஒரு விளையாட்டு அல்லது விளையாட்டுக்கள் பற்றி வர்த்தமான பத்திரிகை வாயிலாக வெளியிடப்படும் நியமங்கள் ஊடாக அமைச்சரினால் பெயரிடப்படும். அவ்விளையாட்டு அல்லது விளையாட்டுக்கள் தொர்பில் ஒரு மாவட்ட விளையாட்டுச் சங்கம் மற்றும் மாகாண விளையாட்டு சங்கம் வீதம் அமைக்கவியலும்.

விளையாட்டு கழகங்கள் மற்றும் சங்கங்களின் பதிவுகள்.

28. மேலே 26 பிரிவின் கீழ் ஏதேனும் ஒரு விளையாட்டு அல்லது விளையாட்டுக்கள் குறிப்பிடப்பட்ட வேளையில்,

(1) விளையாட்டுச் சபை மூலம் உதவிகள் பெற்றுக்கொள்ள விருப்பமான அனைத்து விளையாட்டுக் கழகங்கள் மற்றும் மாவட்ட விளையாட்டுச் சங்கங்களும் பதிவு செய்துகொள்வதற்காக மாகாண விளையாட்டுப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(2) தற்போது ஒரு விளையாட்டு அல்லது விளையாட்டு வகைக்கான மாகாண சங்கமொன்று இருக்குமாயின் அவ்வகையான சங்கமொன்று இந் நியதிச் சட்டத்தில் இனிக் குறிப்பிடப்படும் நியதிக்கு அமைய பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்க வேண்டும்.

(3) பதிவு சம்பந்தமாக அதிருப்தியடையும் யாராயினும் இருப்பின் அந்தத் தீர்மானங்களுக்கு அல்லது நடவடிக்கைக்கு எதிராக முப்பது தினங்களுக்குள் அமைச்சருக்கு மேன் முறையீடு செய்யவியலும்

விளையாட்டுச் சங்கமொன்றின், கழகங்கள் அல்லது சங்கங்களின் பதிவை இரத்துச் செய்தல்.

29. **பதிவை இரத்து செய்தல்.**

(1) விளையாட்டுக் கழகமொன்றின் அல்லது அதிகாரிகளினால் அல்லது அங்கத்தவர் ஒருவரால் ஊழல், மோசடி, முறைகேடு நடைபெற்றுள்ளதாக அல்லது நடைபெறவுள்ளதாக முறைப்பாடு பெற்றால், அதனை நிவர்த்தி செய்யுமாறு அமைச்சின் செயலாளரினால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியினால் எழுத்து மூலமாக அறிவிக்கபபட்ட போது, அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் அவ்வாறு நிவர்த்தி செய்வதனைக் கருத்தில் கொள்ளாதுவிடல் காரணமாக அல்லது:-

(i) அமைச்சின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் அசிரத்தையாக இருத்தல், ஒத்துழைப்பு வழங்காமை அல்லது இடையூறு செய்தல்.

(ii) சங்கத்தின் கடமைகளையும் காரியங்களையும் நிறைவேற்றுவதனை மேற்கொள்ளாதுவிடல் அல்லது யாதேனும் ஒரு விளையாட்டுச் சங்கத்தை பதிவு செய்ய மறுத்தல் அல்லது அப் பதிவை இடைநிறுத்தல், இரத்து செய்தல் போன்ற காரியங்கள் அமைச்சரினால் மேற்கொள்ளப்படலாம்.

(2) இடைநிறுத்தப்பட்ட அல்லது பதிவுசெய்ய மறுக்கப்பட்ட அல்லது இரத்து செய்யப்பட்ட விளையாட்டுக் கழகமொன்றின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுவதற்காக அமைச்சரினால் தற்காலிக ஏற்பாடுகள் செய்யவியலும்.

(3) இந் நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய பதிவு செய்துகொள்ளாத எந்தவொரு விளையாடடுச் சங்கமும், இந்நியதிச் சட்டத்தின் கீழ், பெறக்கூடிய நன்கொடைகள், வசதிகள் அல்லது வேறு உதவிகளை பெற தகுதி பெறமாட்டாது.

(4) யாதேனுமொரு விளையாட்டுக் கழகத்தின் அல்லது சங்கத்தின் பதிவு மறுக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில், இடைநிறுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அல்லது இரத்து செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அவ் விளையாட்டு கழகத்திற்கு அல்லது சங்கத்துக்குச் சொந்தமான அசையாத மற்றும் அசையும் சொத்துக்களை குறித்த காலத்துக்குள் துணை விதிகள் மூலமாக நியமிக்கப்படுகின்ற அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென அமைச்சர் உத்தரவிட இயலும்.

30. விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் கழகங்கள் தொடர்பில்

(1) அமைச்சர் கீழ்கண்டவாறானஉத்தரவுகளைப் பிறப்பிக்கலாம்.
(2) விளையாட்டுக் கழகங்கள் மற்றும் சங்கங்களைப் பதிவு செய்யும் போதுஅறவிடக்கூடிய கட்டணங்கள்,.சங்கங்களின் அமைப்பு மற்றும் ஸ்தாபிதம்.
(3) அச் சங்கங்களின் கடமைகள், அதிகாரங்கள் மற்றும் காரியங்கள்.
(4) அச் சங்கங்களின் தீர்மானங்களுக்கு அல்லது செயற்பாடுகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்யும் நடவடிக்கைகள்.

## பகுதி IV

### விளையாட்டுப் புலமைப் பரிசில் வழங்குதலும் விளையாட்டு கல்வி நிறுவனங்களைஅமைத்தலும்

31. கீழ்க்காணும் நோக்கங்களுக்காக விளையாட்டுப் புலமைப்பரிசில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையை அமைச்சர் நிர்ணயிக்க இயலும் விளையாட்டுப் புலமைப்பரிசில் வழங்குதல்.

(1) விளையாட்டு மற்றும் உடற்கல்வி, பொழுதுபோக்கு சம்பந்தமான அறிவை வளர்த்துக் கொள்வதற்காக.

(2) விளையாட்டுக்களில் ஆற்றல் உள்ளவர்களை இனங்கண்டு, அவர்களுக்கு ஆற்றல்களை விருத்தி செய்துகொள்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(3) ஆற்றல்களின் உச்ச விருத்திக்கு ஏற்ற தொழில்நுட்பப் பயிற்சி பெறுவதற்கு தேவையான வசதிகளுக்காக

32. அமைச்சரினால் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட வேண்டிய முறை மற்றும் அது தொடர்பாக பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகளை உத்தரவு மூலம் பிறப்பிக்க இயலும்.

33. அமைச்சரினால், கீழ்க்காணும் காரியங்களுக்காக கல்வி இதன் பின்னர் விளையாட்டுக் கல்வி நிறுவனம் எனக் குறிப்பிடப்படும் விளையாட்டு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவனமொன்று அமைக்கப்பட இயலும். விளையாட்டுக் நிறுவனங்கள் அமைதல்.

34. விளையாட்டுக் கல்வி நிறுவனத்தின் காரியங்களும், பொறுப்புகளும்.

(1) விளையாட்டு மற்றும் உடற்கல்வி சம்பந்தமான அறிவு, ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகளை வழங்குதல்.

(2) அவ் விளையாட்டுக் கல்வி நிறுவனத்தில் பயிற்சி பெறுபவர்களினால் பெறப்பட்டுள்ள திறமைகளை உறுதிப் படுத்திக்கொள்வதற்காக பரீட்சைகள் நடாத்துதல்.

(3) அவ் விளையாட்டுக் கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தியவர்களுக்கு மீள்திறன் சான்றிதழ்கள் மற்றும் தகுதிச் சான்றிதழ்கள் வழங்குதல்.

(4) உடற்கல்வி தொடர்பான ஆலோசகர்களைப் பயிற்றுவித்தல்.

35. விளையாட்டுக் கல்வி நிறுவனத்தில் அனுமதிக்கப்படும் முறைகள் மற்றும் வேறு காரணிகள். விளையாட்டுக் கல்வி நிறுவனத் தில் அனுமதிக் கப்படும் வீதம்.

(1) விளையாட்டுக் கல்வி நிறுவனங்களுக்கு அனுமதித்தல், விளையாட்டுப் பயிற்சி நிறுவனங்களின் கல்வி, பயிற்சி மற்றும் பரீட்சைகள் பற்றிய விதிமுறைகள் அமைச்சரின் ஒப்புதலுடன் மாகாண விளையாட்டுச் சபையினால் காலத்துக்கு காலம் தயாரிக்கப்படலாம். அமைச்சருக்கு,

(2) விளையாட்டுக் கல்வி நிறுவனத்துக்கான வசதிகளை வழங்குதல், பயிற்சி, வதிவிட வசதிகள் மற்றும் நிறுவனத்தின் தேவைகளுக்காக கட்டிட நிர்மாணம், அவற்றின் பராமரிப்பு, உபகரணங்கள் வழங்குதல் ஆகியவற்றுக்காகவும்.

(1) விளையாட்டுக் கல்வி நிறுவனத்தின் பயிலுநர்களுடைய ஒழுக்கம் மற்றும்நலன்புரி சேவைகளை ஏற்பாடு செய்தல் மற்றும் நெறிப்படுத்தலுக்காகவும்.

(2) விளையாட்டுக் கல்வி நிறுவனத்தின் மீள்திறன் சான்றிதழ் மற்றும் தகுதிச் சான்றிதழ் சம்பந்தமாக தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அதிகாரமுண்டு.

36. இந் நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்கும் மாகாண அமைச்சிற்கு வெளியிலுள்ள அலுவலர்களுக்கு படிகள் வழங்குவது பற்றி மாகாண சபையின் அனுமதியுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படும்.

## பகுதி V
## குற்றங்களும் தண்டனைகளும்

37. யாராயினும் ஒருவர், இந் நியதிச் சட்டத்தின் விதிமுறைகளை அல்லது விதிக்கப்படும் கட்டளைகளை மீறுதல், மேற்கொள்ளாதுவிடல், கவனியாதுவிடல், இந் நியதிச் சட்டத்திற்கு அல்லது அதன் கீழ் பிறப்பிக்கப்படும் கட்டளைகளுக்கு இணங்க ஏதாவது விடயம் பொறுப்பளிக்கப்பட்டவர் அதனைச் செய்வதற்கு இடையூறு விளைவித்தல் அல்லது இதில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளைப் பெறுவதற்காக பொய்யான தகவல்களை வழங்குதல் போன்ற காரியங்களைச் செய்தால் அந்த நபர் இந் நியதிச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாவார்.

(1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றமிழைக்கும் ஒவ்வொருவருக்கும் மஜிஸ்ட்ரேட் நீதிவான் முன்னிலையில் நடாத்தப்படும் சிறு வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியாக காணப்படுமிடத்து ரூபா 5000.00 அபராதம் செலுத்துவதற்கு அல்லது ஆறு மாதத்திற்கு மேற்படாத சிறைத் தண்டணைக்கு அல்லது குறித்த தண்டம் மற்றும் சிறைத் தண்டனை ஆகிய இரண்டிற்கும் உட்பட வேண்டும்.

(2) இந் நியதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் யாதேனுமொரு கட்டளையை மீறல் மேற்கொள்ளாதுவிடல் கவனியாதுவிடல் இந் நியதிச் சட்டத்திற்கு அல்லது அதன் கீழ் பிறப்பிக்கப்படும் கட்டளைககுளுக்கு இணங்க செயற்படாத ஏதாவது நிறுவனம் இருப்பின் அந் நிறுவனத்தின் தொழிற்பாடு அமைச்சரினால் இடைநிறுத்தப்பட வேண்டும்.

## பகுதி VI

## பொதுவான ஏற்பாடுகள்

38. விதிக்கப்பட வேண்டுமென இந் நியதிச் சட்டத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள, கட்டளைகள் தயாரிப்பதற்கு இந் நியதிச் சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ள தேவைப்படக்கூடிய சகல காரியங்கள் தொடர்பாகவும் அமைச்சரினால் கட்டளைகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

39. இந்நியதிச் சட்டத்தில் உட்படுத்தப்பட்டுள்ள கட்டளைகளை நிறைவேற்றுவதற்கான விதிமுறைகள் அமைச்சரினால் தயாரிக்கப்படுவதுடன், அவற்றை கூடிய விரைவில் மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்டு சபையின் பிரேரணை மூலம் திருத்தங்களுடன் அல்லது திருத்தங்களின்றி அங்கீகரிக்கப்பட்டால், அவ் அனுமதி வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து அல்லது தீர்மானிக்கப்பட்ட பிந்திய திகதியிலிருந்து சட்ட அந்தஸ்தைப் பெறும்.

வலுவிழத்தல். 40. இந் நியதிச் சட்டம் ஆளுநரின் அங்கீகாரம் பெற்ற திகதியிலிருந்து 1977 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கம் கொண்ட ஊவா மாகாண விளையாட்டு நியதிச் சட்டம் வலுவிழந்துவிடும்.

சொற்பொருள். 41. இந் நியதிச் சட்டத்தின் உட்கருத்து வேறு விதத்தில் தேவைப்படாதவிடத்து.

(1) "அமைச்சர்" என்பது ஊவா மாகாணத்தின் மாகாண சபையினது அமைச்சரவைக்குரிய விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான அமைச்சரைக் குறிக்கும்.

(2) "ஆளுநர்" என்பது ஊவா மாகாண ஆளுநராவார்.

(3) "செயலாளர்" என்ற பதம் ஊவா மாகாணத்தின் மாகாண சபையினது விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான செயலாளரைக் குறிக்கும்.

(4) "விளையாட்டுகள் அல்லது விளளையாட்டு" என்றதன் கீழ் நியதிச் சட்டத்திற்கு ஏற்புடையதான அமைச்சின் செயலாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும் சகலவிதமான விளையாட்டுக்கள், ஆட்டங்கள், பொழுது போக்குகள் உடற்பயிற்சிகள், உடற்கட்டு விருத்திப் பயிற்சிகள் போன்றன அடங்கும்.

(5) "மாகாண சபை" என்பது ஊவா மாகாணத்தின் மாகாண சபை ஆகும்.

(6) "விளையாட்டுக் கழகம், சங்கம்" என்பது நியதிச் சட்டத்திற்கு ஏற்புடையதான எந்தவொரு விளையாட்டினதும் பயிற்சி மற்றும் மேம்படுத்தும் காரியத்துக்காக அமைக்கப்படும் ஒரு கழகம் அல்லது சங்கம் ஆகும்.

42. இந்நியதிச் சட்டத்தின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிச் சொற்றொடர்களில் ஏதாவது கருத்து முரண்பாடு காணப்பட்டால் அத் தருணத்தில் சிங்கள மொழிச் சொற்றொடரே வலுவுள்ளதாக அமையும்.

4 - 250

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.